## ஏப்ரல் - 24

**"நம்மில் ஒவ்வொருவனும், பிறனுடைய பக்தி விருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக் கடவன்"**

**- ரோம 15 : 2**

தன்னுடைய வேலை சம்பந்தமான உத்தியோகம், அழைப்பு இவைகளின் முக்கிய காரியம் தியாகமே என்பது ஒவ்வொரு கர்த்தருடைய சீஷனும் படிக்க வேண்டிய படிப்பினையாகும். சமாதானத்தின் காரணமாக நம்முடைய சொந்த வழிகளையும் அல்லது ஏற்பாடுகளையும், நமது சொந்த முறைகளையும் அல்லது மனவிருப்பங்களையும் துறப்பதின் சந்தர்ப்பம், ஒரு வகையான ஊழியம் என்பதை கர்த்தருடைய சீஷர்கள் அடிக்கடி கண்டுகொள்ளாதிருக்கிறார்கள். நம்முடையதற்கு பதிலாக மற்றவர்களுடைய ஏற்பாடுகளையும், விருப்பங்களையும் ஏற்றுக் கொள்ளுதல் வெறும் தனிப்பட்ட முறையில் சொந்தமான மனவிருப்பங்களுக்கான சந்தர்ப்பங்களும், கர்த்தர் அந்த விஷயத்தை ஒரு வழியில் ஏற்றுக்கொள்ள விருப்பமுள்ளவராயிருக்கிறார் என்று நம்புகிற சந்தர்ப்பங்களாகும். அப்படிச் செய்வதால், சில நன்மையை அடையலாம் என்று நாம் கண்டால் சமாதானத்தின் பட்சமாக மற்றவர்களுடைய இஷ்டத்துக்கு நம்முடைய மனவிருப்பங்களைத் தியாகம் பண்ணலாம்.

**-Z ’14, 308, 309(R 5555).**

இந்த சம்பந்தத்திலிருந்து, பரி.பவுல் கர்த்தரின் ஒரு உடன் சீஷனைத்தான் ஒருவனுடைய பிறன் என்றும் மற்றவர்களுடைய குறைந்த அர்த்ததில் பிறன் என்றும் குறிக்கிறார் என்று காண்கிறோம். மற்றவர்களை அவர்களுடைய மாம்சத்தையல்ல ஆனால், அவர்களுடைய புது இருதயத்தையும், புது மனதையும், புது சித்தத்தையும் பிரியபடுத்த தன்னைத் தானே வெறுப்பது கிறிஸ்துவின் சீஷனுடைய கடமை மட்டுமல்ல, ஆனால் சலுகையாகவும் இருக்கிறது. அவர்கள் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலும் கட்டப்படுவதற்காக இப்படி பிரியப்படுத்துவது அவர்களுடைய நன்மைக்காக இருக்க வேண்டும்.

**-P ’30, 31.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

மத் 8:19-22; 10:37-39; 13:44-46; 16:24,25; 19:12,21; லூக் 14:26-33; 21:2-4; யோவா 12:25; அப் 20:22-24; 21:13; ரோம 14:1-15:5; 1கொரி 6:12; 8:10-13; 9:12-27; 10:23,24; பிலி 2:4; 3:7-11; 1பேது 2:11-16; 4:1,2; யூதா 20,21.

**கோபுர வாசிப்பு :** Z ’14, 69(R 5412).

**வினாக்கள் :** சகோதரருக்காக இந்த வாரம் நான் என்னை வெறுத்தேனா? எப்படி? ஏன்? அதில் உதவியாகவும் இடையூறாகவும் இருந்தது என்ன? ஏற்பட்ட பலன்கள் என்ன?